**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No.164/2023**

**வழக்கு சாட்சி PW – 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆக்னஸ் ராணி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 13th, 2024.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் நீர்வளத்துறையில் செயற் பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 30.06.2022ம் தேதி திருநெல்வேலி, நீர்வளத்துறையில் கண்காணிப்பு பொறியாளர் ஆசைத்தம்பி என்பவருக்கு பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. அந்த விழா இரவு 08.00 மணிக்கு முடிந்தது. நான் கிளம்பி ஆவுடையானூருக்கு சுமார் 10.00 –10.30 மணியளவில் வீட்டிற்கு வந்தேன். வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீடு திறந்து கிடந்தது. வீட்டிற்குள் சென்று பார்த்தபோது, வழக்கமாக எனது அப்பா ஹாலில் படுத்திருப்பார். ஆனால் அன்றைய தினம் எனது அப்பாவை ஹாலில் காணவில்லை. கிச்சனில் லைட் எரிந்து கொண்டிருந்ததால் எனது அம்மா கிச்சனில் இருப்பதாக நினைத்து நான் அம்மா, அப்பா எங்கே? என்று கேட்டேன். வீட்டு ஹாலில் உள்ள ஊஞ்சலில் நான் கொண்டு சென்ற என்னுடைய அலுவலகப்

பையை வைத்தபோது, ஒரு முனங்கல் சத்தம் கேட்டது. அப்போது, வடமேற்கில் உள்ள பெட்ரூமின் வெளியில் நின்று அம்மா, அப்பா உங்களை பூட்டிக்கொண்டு போய்விட்டாரோ? என்று கேட்டுக்கொண்டே அந்த கதவைத் திறந்தேன். அப்போது, இருட்டாக இருந்தது. எனது அம்மா மெதுவாக அப்பாவை பார், என்று சொன்னார். நான் உடனே லைட்டைப் போட்டேன். எனது அப்பா மேற்கு பக்கம் தலை வைத்து, தரையில் கிடந்தார். எனது அம்மா, எனது அப்பாவின் கால் பக்கம் தலை வைத்து, மேற்கு நோக்கி கால் நீட்டி படுத்து கிடந்தார். எனது அப்பாவின் வேஷ்டியை உருவி, வாயை கட்டியிருந்தார்கள். கைகளிலும், கால்களிலும் லைலான் கயிற்றால் கட்டப்பட்டு கிடந்தார். எனது அப்பாவிற்கு அப்போது, சுமார் 88 வயதிருக்கும். எனது அம்மாவிற்கு கைகளும், கால்களும் கட்டப்பட்டிருந்தது. வாயில் துணி வைத்த நிலையில் இருந்தது. அதில் ஏதோ பசை போல் தடவி வைத்தது போல் இருந்தது. உடனே நான் அன்றைய தினம் என்னை வீட்டிற்கு கொண்டு வந்து விட்ட பிரகாஷ் என்பவருக்கு போன் செய்து, நடந்த விபரத்தை சொன்னேன். நான் எனது அப்பா, அம்மா கையில் கட்டப்பட்டிருந்த கட்டுக்களை அவிழ்த்து விட்டேன். உடனே, பிரகாஷ் எனது வீட்டிற்கு பின்பக்கம் கேட் பக்கம் நின்று, எனக்கு போன் செய்தார். நான் கேட் கதவை திறந்து பின்பக்கம் வழியாக பிரகாஷ் என்பவரை எனது வீட்டிற்குள் அழைத்து வந்தேன். பிரகாஷ் வரும்போது, அவருடன் அவரது வொர்க் ஷாப்பில் வேலை செய்யும் ஒரு நபரையும், அவருடன் அழைத்து வந்திருந்தார். நாங்கள் 3 பேரும் சேர்ந்து எனது அம்மாவையும், அப்பாவையும் தூக்கி வைக்க முயற்சித்தோம். ஆனால், அவர்களால் உட்கார முடியவில்லை. நாங்கள் எனது அம்மாவையும், அப்பாவையும் கட்டிலில் தூக்கி படுக்க வைத்தோம்.

விருத்தாசலத்தில் உள்ள எனது தம்பி கார்த்திகேயன் என்பவருக்கு தகவல் தெரிவித்தேன். ஆனால், என் தம்பி கார்த்திகேயன் ஏற்கனவே விருத்தாசலத்திலுள்ள அவரது வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் பெரியசாமி என்பவரது அப்பா இறந்ததற்காக வந்து கொண்டிருந்தார். எனது தம்பி எங்களது உறவினர்களுக்கு தகவல் சொல்லி, அனைவரும் வீட்டிற்கு வந்தார்கள். பிரகாஷ் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி, போலீசாரும் வந்தார்கள். எங்களது வீட்டிற்கு பக்கத்திலுள்ள சி.ஜே.மருத்துவமனை மருத்துவர் தர்மராஜ் எங்களது உறவினர். அவருக்கு எங்களது உறவினர் யாரோ, போன் செய்தார்கள். அவர் மருத்துவமனையில் பணிபுரியும் 2 செவிலியர்களை எங்களது வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அவர்கள் இருவரும் எனது அப்பா, அம்மாவிற்கு முதலுதவி சிகிச்சை அளித்தார்கள். ஆனால், எனது அப்பா, அம்மா இருவரும் முடியவில்லை, முடியவில்லை என்று முனங்கி கொண்டிருந்தார்கள். சம்பவத்தின் போது, எனது அம்மாவிற்கு சுமார் 84 வயதிருக்கும். அதன் பின்னர் போலீசார் வந்தார்கள். தர்மராஜ் மருத்துவரும் வந்தார். எனது அப்பா, அம்மாவை பார்த்து விட்டு, மருத்துவர் எனது அப்பா, அம்மாவிற்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக சொன்னார். போலீசார் தென்காசி அரசு மருத்துவமனைக்கு போகச் சொன்னார்கள். ஆனால் மருத்துவர் தர்மராஜ் எங்களது உறவினர் என்பதால் அவர், அவருடைய மருத்துவமனைக்கு எனது அப்பா, அம்மாவை சிகிச்சைக்காக கூட்டிச் சென்றார். நான் வீட்டில் இருந்தேன். தென்மேற்கு முனையில் எனது அப்பா, அம்மாவை கட்டிபோட்டிருந்த அந்த பெட்ரூமில் உள்ள மரப்பெட்டி உடைந்து

கிடந்தது. அந்த மரப்பெட்டியில் தான் என்னுடைய நகைகள் மற்றும் எனது தம்பி மனைவியின் நகைகள், தம்பியின் நகைகள், தம்பி மகன் நகை, எனது அம்மாவின் நகைகள் அனைத்தையும் அந்த மரப்பெட்டியில் தான் ஒன்றாக வைத்திருந்தோம். மரப்பெட்டியில் இருந்த நகைகளைத் தவிர, சாமி படத்திற்கு அருகில் 7 பவுண் தாலிச்செயின் ஒன்றை வைத்திருந்தோம். அந்த தாலிச்செயின் இந்த சம்பவத்திற்கு 5, 6 நாட்களுக்கு முன்பாக எனது தம்பி விருத்தாசலத்திலிருந்து வாங்கி, எனது தங்கை பேபி சுஜா என்பவரிடம் கொடுத்து அனுப்பி வைத்த நகை. எனது அம்மா அணிந்திருந்த நகைகள் அவ்வாறாகவே இருந்தது. மரப்பெட்டியில் 10 லட்ச ரூபாய் பணம் வைத்திருந்தோம். அதுவும் திருடு போய் விட்டது. மரப்பெட்டியில் இருந்த எனக்கு சொந்தமான சுமார் 50 பவுண் நகை, அதில் ஒரு பெரிய டாலர் செயின் ஒன்று, சின்ன டாலர் செயின் ஒன்று, கோதுமை மாடல் செயின் 3 பவுணில் 2 எண்ணம் அதில் ஒன்றில் முருகன் டாலர் போடப்பட்டிருந்தது. 3 பவுணில் கல் வைத்த நெக்லஸ் ஒன்று, 3 பவுணில் கல் வைக்காத நெக்லஸ் ஒன்று, 2 பவுணில் கல் வைக்காத நெக்லஸ் ஒன்று, 2 மோதிரம்(Rectangle Size). பெரிய ஜிமிக்கி ஒரு ஜோடி, கல் வைத்த கம்மல் – ஒரு ஜோடி, சின்ன சின்ன கம்மல்கள் – 3 ஜோடி, ஒன்றரை பவுண் எடையுள்ள தலா 4 வளையல்கள், கழுத்தை ஒட்டி போடக்கூடிய ஒரு சின்ன செயின் ஆகிய என்னுடைய நகைகளை காணவில்லை. எனது அம்மாவின் ரெட்டை வடை செயின் –2 எண்ணம், கல் வைத்த கம்மல் –1, கல் வைக்காத கம்மல் – 2 ஜோடி, எனது அம்மாவின் நெளி மோதிரம் ஒன்று, வளையல்கள் – 2 எண்ணம். எனது

தம்பி மனைவியின் 3 அடுக்கு மாலை - 1, ஆரம் - 1, கல் வைத்த நெக்லஸ் - 1, கல் வைத்த கம்மல் - 1 ஜோடி. எனது தம்பி மகனின் பிரைஸ்லெட் - 2 ஜோடி மற்றும் பல நகைகள் காணாமல் போயிருந்தது. நாங்கள் வைத்திருந்த நகைகள் என்னனென்ன? என்று போலீசார் கேட்டார்கள். சம்பவம் நடந்த ஒரு வாரம் கழித்து, எனது அம்மாவிடம் நடந்த விபரத்தை கேட்டேன். வீட்டிற்கு வெளியே வராண்டாவில் எனது அம்மா சாமி புக் படித்துக்கொண்டிருந்ததாகவும், எனது அப்பா ஹாலில் டீவி பார்த்து கொண்டிருந்ததாகவும், அப்போது எனது அம்மாவை அன்றைய தினம் இரவு 07.00 மணிபோல், யாரோ பின்னாலிருந்து கண்ணை பொத்தியதாகவும், அப்போது எனது அம்மா, பேரன் தான் வந்து கண்ணைப் பொத்தியதாக நினைத்து ஏல, என்னல, இப்போ வந்திருக்க, என்று சொல்லியுள்ளார். அப்போது, எனது அம்மாவின் வாயை வேகமாக, அழுத்தமாக பிடித்தபோது, என்ன முரட்டு பிடியாக இருக்கிறது, வேறு யாரோ, என்று நினைத்து எனது அம்மா, 'அப்பா, அப்பா' என்று கத்தியுள்ளார். அதற்குள் அந்த நபர் எனது அம்மாவின் வாயினுள் துணி வைத்து அடைத்துள்ளார். எனது அப்பா வழக்கம் போல் எனது அம்மா வீட்டிற்குள் தேரை வரும் போது, கத்துவதால் அதற்காகத் தான் கத்துகிறார் என்று நினைத்து, வீட்டிற்குள்ளேயே இருந்து மெதுவாக வந்துள்ளார். எனது அப்பா வராண்டிாவிற்கு வரும்போது, வீட்டிற்குள் 2 பேர் வந்து மங்கி கேப் போட்டுக்கொண்டு, எனது அப்பாவின் முகத்தை மூடி, தரதரவென்று இழுத்து, தென்மேற்கிலுள்ள ரூமிற்குள் கொண்டு போய், 'நகைகளை எங்கே வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டுள்ளார்கள். அதன் பின்னர் எனது அப்பா, அம்மாவை மருந்து மாதிரி ஒரு இதை வைத்து எதிரிகள்

முகத்தில் மூடியதால், அதன் பின்னர் நடந்த விபரத்தை எனது அப்பா, அம்மாவால் பார்க்க முடியவில்லை என்று எனது அப்பா, அம்மா என்னிடம் சொன்னார்கள். 01.07.2022ம் தேதி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. 26.07.2022ம் தேதிக்கு 2, 3 நாட்களுக்கு முன்பு பாவூர்சத்திரம் காவல் நிலையத்திற்கு போலீசார் வரச்சொன்னார்கள். நானும், எனது தம்பியும் காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் ஆய்வாளரின் அறையில் மேஜையில் நகைகளை வைத்து, எங்களுக்கு சொந்தமான நகைகளை அடையாளம் காட்டச் சொன்னார்கள். நான் நகைகளை அடையாளம் காட்டினேன். காவல் நிலையத்தில் எதிரி மாரியப்பன் இருந்தார். அவர் ஏற்கனவே எங்கள் வீட்டில் வெல்டிங் வேலை செய்தவர் மற்றும் 4 எதிரிகளை போலீசார் பிடித்து லாக்அப்பில் வைத்திருந்ததாக கூறினார்கள். மாரியப்பனை அழைத்து சென்று ஓரிடத்திலிருந்து 2 இலட்ச ரூபாய் பணம் எடுத்து கொண்டு வந்தார்கள். சம்பவம் நடந்த 2 நாட்கள் கழித்து எதிரி மாரியப்பனும், எனது சித்தப்பா மகன் பூசைத்துரை என்பவரும் மருத்துவமனையில் உள்ள எனது அப்பாவையும், அம்மாவையும் பார்க்கச் சென்றுள்ளார்கள். எதிரி மாரியப்பன் குடித்து விட்டு, வெளியில் உள்ள கடையிலேயே கிடப்பதால் அக்கம் பக்கம் உள்ளவர்கள் புகார் செய்ததால், எதிரி மாரியப்பன் ஏற்கனவே எங்களது வீட்டிற்கு வெளியே மேற்கு பக்கமுள்ள கடையை வாடகைக்கு எடுத்து, நடத்தி வந்ததால் எனது அப்பா அந்த கடையை காலி செய்யச் சொன்னதால் தான் பழி வாங்குவதற்காக இவ்வாறு செய்தார் என்று நினைக்கிறேன். நான் நீதிமன்றத்தின் மூலம்

26.07.2022ம் தேதியும், இன்னொரு நாளிலுமாக 76 பவுண் நகைகளையும், ரூபாய் எட்டு இலட்சத்து ஒன்பதாயிரம் பணத்தையும் நான் பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படுவது நான் பெற்றுக் கொண்ட நகைக்கான புகைப்படங்கள் - அ.சா.ஆ.2. பணத்திற்கான புகைப்படங்கள் - அ.சா.ஆ.3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

(ஒம்)/-C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.